# போராட்டம்

Transcribed from a message spoken on September 19, 2010 in Chennai

By *R.S.Milton*

## பாடுகளும், ஜெபமும்

நாம் பல போராட்டங்கள்வழியாகப் போகும்போது, அந்தப் போராட்டங்களைப்பற்றி தேவன் என்ன நினைக்கிறார் அல்லது என்ன செய்கிறார்? தேவனுடைய பிள்ளைகளுடைய வேதனைகள், வலிகள், துன்பங்கள், பாடுகள், இவைகளெல்லாம் மிகவும் உண்மைதான். "ஓ! இவைகளெல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் எவ்வளவு நலமாயிருக்கும்" அல்லது "இவைகள் ஒரு முடிவுக்கு வருவதற்கு நான் எதை வேண்டுமானாலும், செய்யத் தயாராக இருக்கிறேன்," என்கிற அளவுக்குத் தேவனுடைய மக்கள் பாடுகள், துன்பங்கள், வேதனைகள், வலிகள் ஆகியவைகளின்வழியாகக் கடந்துபோகக்கூடும்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதால், ஏதோவொரு விதத்தில் நிச்சயமாக நாம் அதற்காக ஜெபிப்போம். ஒருவேளை முழங்காற்படியிட்டு ஜெபிக்காவிட்டாலும், அதற்காகத் தொடர்ந்து ஒரு போர் புரிவதுபோல் ஜெபிக்காவிட்டாலும், ஏதோவொரு வகையில் ஜெபிக்கத்தான் செய்வோம். ஒருவேளை நம்முடைய பெருமூச்சுகள்கூடத் தேவனுக்குமுன்பாகச் ஜெபமாக இருக்கலாம். இஸ்ரயேல் புத்திரர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்தபோது, அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்ட சத்தம் தேவ சந்நிதியை எட்டிற்று என்றும், தேவன் அவர்களுடைய பெருமூச்சைக் கேட்டார் (யாத். 2:24) என்றும் வாசிக்கிறோம். ஒருவேளை இது நமக்கு ஆறுதலாக இருக்கலாம். ஏனென்றால், ஜெபிக்க முடியாத போது, நாம் பெருமூச்சுவிடும்போது கர்த்தர் அதைக் கேட்கிறார். அவர் அந்தப் பெருமூச்சை "இயேசு வின் நாமத்தில் பிதாவே" என்று முடிக்கப்படாத ஒரு ஜெபமாக எடுத்துக்கொள்கிறார்.

## தேவனுடைய அன்பு

நாம் தேவனுடைய அன்புக்குப் பாத்திரர்; நாம் தேவன் அன்புசெலுத்துகிற பாத்திரங்கள். தாம் அன்பு கூருவதற்காகவே தேவன் மனிதனைப் படைத்தார் என்று சொன்னால் ஒரு விதத்தில் அது சரிதான். தேவன் தம்மை வெளியாக்குவதற்காக மனிதனைப் படைத்தார் என்று நாம் கேள்விப்பட்டிருப்போம். அதுவும் சரிதான். ஆனால், தாம் அன்புகூருவதற்கு அல்லது தம்முடைய அன்பைப் புரிந்துகொள் வதற்கு, அறிந்துகொள்வதற்கு, உணர்ந்துகொள்வதற்கு ஒரு பாத்திரம் வேண்டும் என்பதற்காக அவர் மனிதனை உண்டாக்கினார்.

ஒரு நாய் மனிதனுடைய அன்பைப் புரிந்துகொள்ள முடியுமா? கொஞ்சம் புரிந்துகொள்கிறது. அது தன் எஜமானைப் பார்த்தவுடன் தன் வாலை ஆட்டுகிறது, அவன்மேல் தாவுகிறது. இவைகளைப் பார்க்கும் போது ஒரு நாய்கூட மனிதனுடைய அன்பை ஓரளவுக்குப் புரிந்துகொள்கிறது என்று நாம் கருதலாம். அது தன்னுடைய அன்பை ஏதோவொரு விதத்தில் காண்பிக்கிறது. ஆனால், மனிதனுடைய இருதயத் திலிருந்து வருகிற அன்பு எப்படிப்பட்ட அன்பு என்று ஒரு நாயினால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஏனென்றால், நாயும் மனிதனும் வெவ்வேறு உயிரினம். மீன் தொட்டியில் இருக்கிற மீனுக்கு என்னதான் ஒவ்வொரு நாளும் உணவு கொடுத்தாலும், அது அந்த மனிதனுடைய அன்பை உணர்ந்து கொள்ள முடியாது. ஒருவேளை ஓரளவுக்கு. பறவைகள், விலங்குகள், மீன்கள் இவைகளெல்லாம் தேவனுடைய அன்பை ருசிக்கின்றனவா? ருசிக்கின்றன. "*அவர் மிருக ஜீவன்களுக்கும், கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார்*" (சங். 147:9).

தேவன் நம் பெருமூச்சை ஜெபமாக எடுத்துக்கொள்கிறார் என்று சொன்னேன். காகங்களின் கூப்பிடு தலைக்கூட தேவன் ஜெபமாக எடுத்துக்கொள்கிறார். நான் இதை மிகைப்படுத்திச் சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். அது தேவனுடைய பார்வையில் ஒரு கூப்பிடுதல். "*ஏற்ற வேளையில் ஆகாரத் தைத் தருவீர் என்று அவைகளெல்லாம் உம்மை நோக்கிக் காத்திருக்கும். நீர் கொடுக்க அவைகள் வாங்கிக்கொள்ளும். நீர் உம்முடைய கையைத் திறக்க அவைகள் நன்மையால் திருப்தியாகும். நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும். நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்*" (சங். 104:27-29). இது தேவனுடைய அன்பு ஒரு காக்கைக் குஞ்சின் கூப்பிடுதலைக் கேட்டு. அதனுடைய கரைச்சலைக் கேட்டு, தேவன் அதற்கு ஆகாரம் கொடுக் கிறார். மிகப் பெரிய திமிங்கலங்களுக்கும் அவர் ஆகாரம் கொடுக்கிறார்.

தேவனுடைய அன்பைப்பற்றி நாமெல்லாரும் கேள்விப்பட்டிருப்போம். "தேவன் நம்மேல் அன்புகூரு கிறார் என்பதை நான் பிறந்ததுமுதல் கேள்விப்பட்டிருக்கிறேன்," என்று நாம் சொல்லலாம். ஆனால்,

உண்மையிலே தேவனுடைய அன்பைப்பற்றி நமக்குத் தெரியாது. தேவனுடைய அன்பு "அறிவுக்கெட் டாத அன்பு" (எபே. 3:19) என்று வேதாகமம் சொல்லுகிறது

**நித்திய ஜீவன்**

தேவனுடைய அன்பை மட்டும் அல்ல, தேவனுடைய பல அம்சங்களை நமக்குத் தெரியாது. ஆனால், அவைகளை நாம் தெரிந்துகொள்ள முடியும். தேவனை அறிந்துகொள்வதற்காகத்தான் அவர் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கிறார். "*ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின வராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்*" (யோவான் 17:3). ஒரு நாய் ஒரு மனி தனை அறிந்துகொள்ள முடியாது. மனிதன் தேவனை ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடியும். ஏனென் றால், தேவன் தம் ஜீவனையே மனிதனுக்கு வழங்கியிருக்கிறார். தேவன் தம் ஜீவனை மனிதனுக்கு வழங்கியிருப்பதற்கு ஒரே காரணம் அல்லது முதல் காரணம், மனிதன் தேவனை அறிந்துகொள்ள வேண்டும். தேவனை அறிந்துகொள்வதற்குத் தேவையான திறனை அவர் மனிதனுக்கு வழங்கியிருக் கிறார். எல்லா மனிதர்களுக்கும் அல்ல. அவருடைய குமாரனுக்குள் இப்படிப்பட்ட ஒரு ஆற்றலை அவர் வழங்கியிருக்கிறார். நாம் தேவனை விட்டுத் தூரமாக இருந்தபோது, தேவனுடைய கோபாக் கினைக்குப் பாத்திரராக இருந்தோம். அவருடைய அன்பின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் நாம் தேவனை அறிந்துகொள்ள முடியும்.

**கடினமான பாதை**

நாம் வாழ்க்கையில் ஒரு கடினமான பாதை வழியாகப் போகும்போது தேவனுடைய முகம் நமக்குத் தெரிவதில்லை. "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும். நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல," என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ் படுத்துக்கொள்வது கடினமான பாதைக்கு ஓர் எடுத்துக்காட்டு. பகலிலே, எப்போது இரவு வரும் என்று ஏங்குவதும், இரவிலே எப் போது பகல் வருமோ என்று ஏங்குவதும் யோபுவின் அனுபவம். இரவும் அவர்களுக்கு ஒரு விடுதலை யைக் கொண்டுவருவதில்லை. பகலும் அவர்களுக்கு ஒரு விடுதலையைக் கொண்டுவருவதில்லை.

தேவனுடைய மக்கள் இப்படிப்பட்ட பாதையின் வழியாகப் போக நேரிடுமா? ஆபகூக்கின் புத்தகத்தை நீங்கள் வாசித்துப்பாருங்கள். "*அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டா காமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூரு வேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான் கால்களைப்போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்*" (ஆப. 3:17-19). எல்லாத் தீர்க்கதரிசனப் புத்த கங்களிலும் தேவன் மனிதனிடம் பேசுகிறார். ஆனால், இந்தப் புத்தகத்தில் மனிதன் தேவனிடம் பேசு கிறான். "இவ்வளவு காரியங்கள் நடைபெறுகிறதே! நீர் என்ன செய்துகொண்டிருக்கிறீர்?" என்று ஆபகூக் தேவனிடத்தில் விசாரிக்கிறான்.

தேவனுடைய பிள்ளைகள் கடினமான பாதை வழியாகப் போகும்போது தேவனுடைய முகம் அவர் களுக்கு மறைக்கப்பட்டதுபோல் தோன்றலாம். மற்றவர்களுடைய வாழ்க்கையிலும், நிலைமையிலும், சூழ்நிலையிலும் தேவன் வேலைசெய்வதுபோல் தோன்றும். ஆனால், நம்முடைய வாழ்க்கையில், நம் முடைய நிலைமையில், நம்முடைய சூழ்நிலையில், தேவன் இல்லாததுபோல் தோன்றும். எங்கு தேடிப் பார்த்தாலும் தேவன் இருப்பதுபோல் தோன்றவில்லை. "காலையில் வேதத்தைத் திறந்து வாசிக்கிறேன். அங்கு தேவன் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் பேச மாட்டேன் என்கிறார். தேவனுடைய வசனம் வெண்கலத்தைப்போல் இருக்கிறது," என்றுகூடச் சொல்லலாம். "நான் ஜெபிக்கிறேன். என் ஜெபம் என் மடியிலே வந்து விழுகிறது. அதனால்தான் நான் ஜெபம் செய்வதில்லை. நான் ஜெபித்தால் தேவன் என் ஜெபத்துக்குப் பதில் தருவார் என்று எனக்குத் தோன்றவில்லை. அல்லது நடக்கின்ற சம்பவங் களைப் பார்த்தால் தேவன் அவைகளில் இருப்பதுபோல் தெரியவில்லை. சங்கீதம் 23இல் தாவீது சொல்வதுபோல் நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடக்கிறேன்," என்றுகூடச் சிலர் சொல்லலாம். மரண இருளின் பள்ளத்தாக்கு என்றால் முன்னால் பார்த்தாலும் இருள், பின்னால் பார்த்தாலும் இருள், இடது பக்கம் பார்த்தாலும் இருள், வலது பக்கம் பார்த்தாலும் இருள், மேலே பார்த்தாலும் இருள், கீழே பார்த்தாலும் இருள், எங்கு பார்த்தாலும் இருள். இப்படிப்பட்ட நிலைமையில் நாம் தேவனைக் கேள்வி கேட்போம். ஆபகூக் தேவனை அப்படிக் கேள்வி கேட்கிறான்.

73ஆம் சங்கீதத்தில் ஆசாப் துன்மார்க்கரைப் பார்த்து பொறாமைப்படுகிறான். "அவர்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறார்கள். செழிப்பாக இருக்கிறார்கள். அவர்களுடைய கண்கள் கொழுப்பினால் எடுப்

பாக இருக்கிறது. அவர்களுடைய பிள்ளைகள் எவ்வளவு நன்றாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கெடுதியும் நேரிடுவதில்லை. அவர்கள் விரும்புவதைவிட அதிகமாக நடைபெறுகிறது. அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அவர்கள் தேவனற்ற மக்கள். அவர்களுக்குத் தேவனோடு நெருங்கின உறவு இல்லை. அவர்கள் தேவனுடைய அரசாட்சியின்கீழ் வாழவில்லை. அவர்கள் சுகமாக வாழ் கிறார்கள். அவர்களுடைய ஆஸ்திகள் பெருகுகின்றன. நான் வீணாக என்னுடைய இருதயத்தைச் சுத்தம்பண்ணி, என்னுடைய கைகளைக் கழுவி வாழ்கிறேனே! ஆனால், தேவனற்றவர்களுக்கு எல்லாமே நன்மையாக நடப்பதுபோல் தோன்றுகிறதே! நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டு, காலை தோறும் நான் தண்டிக்கப்பட்டிருக்கிறேன். இது என்னுடைய நிலைமை. நான் குற்றமில்லாமல் என் கைகளைக் கழுவி, என் இருதயத்தைச் சுத்திகரித்து என்ன இலாபம்? ஆனால், இப்படிச் சொன்னால் தேவனுடைய மக்கள் இடறுவார்களே! அப்படியானால் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்து என்ன பயன் என்று நினைப்பார்களே! நான் இதை யோசித்துப்பார்த்தேன். நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக் குள் பிரவேசித்து, அவர்களுடைய முடிவைக் கவனித்து உணரும்வரை இதைப் பார்க்கும்போது அது என் இருதயத்துக்கு மிகவும் வலியை, வேதனையை, வருத்தத்தை உண்டுபண்ணுகிறது. இதை அறியும் படிக்கு யோசித்துப்பார்த்தேன். *நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களிலே நிறுத்தி பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர்,"* என்று ஆசாப் *புலம்புகிறான்.* இப்போது அவருக்குப் புரிந்தது.

### தேவனுடைய சமுகம்

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் சென்று, அவரிடத்தில் நாம் விசாரிக்க வேண்டும். இதுதான் நான் சொல்ல விரும்புகிற காரியம். நாம் போய் விசாரிப்பதற்குத் தேவனுடைய பரிசுத்த ஸ்தலம் உண்டு. *"நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன். அவருடைய மறுமொழி களை நான் அறிந்து, அவர் எனக்குச் சொல்வதை நான் உணர்ந்துகொள்வேன். அவர் தம்முடைய மகா வல்லமையின்படியே என்னோடே வழக்காடுவாரோ?"* (யோபு 23:3-6) என்று யோபு கதறுகிறார். தேவனுடைய சமுகத்திற்குச் சென்று, அமர்ந்து, நாம் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். தேவன் நம்மோடு இடைப்படுவதற்கும், தேவன் நம்மோடு பேசுவதற்கும். அவருக்கு நாம் வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

*"கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர்; யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர். யாருக்கு அஞ்சுவேன்? என் சத்துருக்களும், என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள். எனக்கு விரோத மாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது. என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன். அதையே நாடுவேன். நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாக வும் நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்,"* (சங். 27:1-4) என்று தாவீது சொல்லுகிறான். யுத்தம் ஒருநாள் அல்லது இரண்டு நாள் நடந்தால் பயப்படாமல் இருப்போம். வாழ்நாள் முழுவதும் யுத்தம் என்றால் நம்முடைய மனம் தளர்ந்துபோகும்.

பாளயம், போர், எதிரிகள், பட்டயங்கள் உருவுகிற சத்தம், எங்கு பார்த்தாலும் இருதயத்தைக் கரைந்து போகச்செய்கிற சத்தமாக இருக்கும்போது, நாம் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று, கர்த்தருடைய முகத்தைப் பார்க்க வேண்டும். அல்லது கர்த்தருடைய இருதயத்தைப் பார்க்க வேண்டும். கர்த்தருடைய முகம் என்றால் கர்த்தருடைய இருதயம்தான்.

*"சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள். அவர் பூமி யின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார். இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள் ளுங்கள். ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன். பூமியிலே உயர்ந்திருப்பேன்"* (சங். 46:7-10).

எங்கு பார்த்தாலும் வில், அம்பு, யுத்தம், போர் என்று இருக்கும்போது, இவைகளையெல்லாம் நம்மால் சமாளிக்க முடியுமா? இவைகளையெல்லாம் நம்மால் ஓயப்பண்ணமுடியுமா? போரும், போர்க்களமும் எப்படி இருக்கும்? அதைப் பார்க்கும்போது நமக்குக் கிலி பிடித்துவிடும். சாதாரண இருதயம் உள்ள ஒரு மனிதன் போர்களத்தைப் பார்க்க முடியாது. அங்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. யார் விடுகிற

அம்பு எந்த நேரத்தில் நம்மேல் பட்டு நாம் சாவோமோ என்ற பயம். உயிருக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அதுதான் போர்க்களம். எது வேண்டுமானாலும் நடக்கலாம். அவர் பூமியின் கடையாந்தரம் வரைப் போர்களை ஓயப்பண்ணுகிறார். இரதங்களை அவர் நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.

## தேவனைத் தேடுதல்

நான் கற்றுக்கொண்டிருக்கிற, நீங்களும் கற்றுக்கொண்டால் நலமாயிருக்கிற, ஒருசில காரியங்களை நான் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். எல்லா நேரமும் நாம் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று அவருடைய இருதயத்தைப் பார்க்க வேண்டும். நாம் இப்படிப்பட்ட போர் வழியாக, யுத்தத்தின்வழியாக அல்லது வரையறுக்க முடியாத ஒரு சூழ்நிலைவழியாகப் போகும்போது தேவனுடைய இருதயத்தைப் பார்க்க வேண்டும். அவருடைய இருதயம் என்னவென்று அறியும்போது ஒரு சமாதானம் வரும்.

"உங்களிடம் விசுவாசம் இல்லை அல்லது மிகக் குறைவாக இருக்கிறது," என்று சிலர் சொல்வார்கள். யோபுவிடம் சென்று, "உங்களிடம் விசுவாசம் இல்லை அல்லது மிகக் குறைவாக இருக்கிறது," என்று யாராவது சொன்னால் எப்படி இருக்கும்? "இவர்களெல்லாம் கறிக்குதவாத வைத்தியர்கள்," என்று அவன் சொல்லுவான். "நான் போன பாதையை நீங்கள் விளையாட்டு அரங்கத்தில்கூடப் பார்த்திருக்க மாட்டீர்கள். நீங்கள் விளையாட்டை தொலைக்காட்சியில்தான் பார்த்திருப்பீர்கள். தொலைக்காட்சியில் மட்டுமே விளையாட்டைப் பார்த்த நீங்கள் நான் களத்தில் இறங்கி எப்படி விளையாட வேண்டும் என்று எனக்குச் சொல்லித்தருகீறீர்களா?" என்று யோபு கேட்கக்கூடும்.

விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பது கேள்வியே இல்லை. எனக்கு விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்போது தேவன் என்ன செய்வார்? என்னிடம் விசுவாசம் இல்லையென்றால் தேவன் போய்விடுவாரா? விசுவாசம் என்பது நாம் உற்பத்திசெய்கிற ஏதோவொன்றுபோலவும், இப்போது நான் செயல்படக்கூடிய அளவுக்கு விசுவாசம் உருவாகிவிட்டது என்பதுபோலவும், நாம் நினைக்கக்கூடாது. அப்படியல்ல. எந்த அளவுக்கு நாம் தேவனுடைய முகத்தைப் பார்க்கிறோமோ, எந்த அளவுக்கு நாம் தேவனுடைய இருதயத்தைப் பார்க்கிறோமோ, அந்த அளவுக்கு அவர்மேல் உள்ள நம்பிக்கையும், விசுவாசமும், பற்றுறுதியும் நமக்கு வரும்.

எப்படிப்பட்ட கொடிய புயலாக இருந்தாலும், அப்போதும் நாம் ஒதுங்குவதற்குத் தேவன் ஒரு கன்மலையை வைத்திருக்கிறார். "போதும் கர்த்தாவே, போதும். என் பிதாக்களைப்பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல," என்று சொல்லி எலியா படுத்துத் தூங்கியபோது தேவன் என்ன செய்தார்? எப்போதாவது தேவன் எனக்குத் தேவைப்படுவார் என்றால் அது எப்போதுதான்? இதுபோன்ற சமயத்தில்தான் தேவன் அதிகமாகத் தேவைப்படுவார். தேவன் அப்போது ஒரு தூதனை அனுப்பி, அவனை எழுப்பி, அவனுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்தான். அவன் அதையும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான்.

"எந்த அளவுக்கு உங்களால் படுத்து உறங்கமுடியுமோ அந்த அளவுக்கு நீங்கள் படுத்து உறங்குங்கள், தேவன் தூதனை அனுப்பி உங்களுக்கு உணவு தருவார்," என்று நான் சொல்லவில்லை. ஆனால், நான் என்ன சொல்லுகிறேன் என்றால் அந்தச் சூழ்நிலையிலும் தேவன் நம்மைச் சந்திப்பார். முதல் தடவை சந்திப்பார், இரண்டாவது தடவை சந்திப்பார், மூன்றாவது தடவை நாற்பது நாள் நடக்கிற அளவுக்கு அவனுக்கு விசுவாசம் வந்துவிடும். ஒரு கட்டத்தில் தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளக் கூடிய அளவுக்கு விசுவாசத்தைச் சுரக்கப்பண்ணுவார். எலியா, "முடியவே முடியாது. நாற்பது நாள் காலை, மதியம், இரவு உணவு கொடுத்தால்தான் நான் இந்த இடத்தைவிட்டுப் போவேன்," என்று சொன்னால் கதை முடிந்துபோகும்.

தேவன் தம் பிள்ளைகளின் நிலைமையை அறிந்திருக்கிறார். நம் பெருமூச்சைத் தேவன் ஜெபமாகக் கேட்கிறார் என்பதற்காக "பெருமூச்சைத்தவிரை நான் வேறு எந்த ஜெபமும் செய்ய மாட்டேன்," என்று சொன்னால் தேவனால் விடுதலை தர முடியாது. அன்று அவர்களால் முடிந்த ஜெபம் பெருமூச்சு. ஆனால், இன்னொரு மனிதன் தேவனுடைய இருதயத்தை அறிகிற அளவுக்கு ஜெபிக்க வேண்டும். ஒரு சமயம் பெருமூச்சு ஜெபமாக இருக்கட்டும். ஆனால், இன்னொரு சமயம் நாம் போர் செய்கிற அளவுக்கு ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். போரை ஆரம்பித்துவிட்டு பாதியில் விடமுடியுமா? சண்டையை ஆரம்பித்துவிட்டுப் பின்வாங்க முடியுமா? பின்வாங்கினால் என்ன நடக்கும்? தோல்விதான்.

ஆபகூக் போன பாதைவழியாக தேவனுடைய பிள்ளைகள் போகும்போது சில ஜெபங்களை நாம் போர்போல நடத்த வேண்டும். போர்போல என்றால் குரலை எழுப்பி, சத்தம்போட்டு ஜெபிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்தக் காரியத்தில் தேவனுடைய இருதயத்தை அறிந்துகொள்வதற்

காக அல்லது அறிந்தது நிறைவேறும் அளவுக்கு இந்த ஜெபம் தொடர்ந்து நடைபெறும். இது கடினமான பாதை வழியாக நாம் போகும்போது தேவன் நமக்குக் கற்பிக்கிற ஒரு பாடம். இதுவரை நாம் போர்போல் ஜெபங்களை நடத்தியிருக்க மாட்டோம். அது வேலையாக இருக்கலாம், கடனாக இருக்கலாம். நோயாக இருக்கலாம். அது எப்படிப்பட்ட நெருக்கமாக இருந்தாலும் சில ஜெபங்களை நாம் போர்போல் நடத்த வேண்டும். தேவனுடைய இருதயம் என்ன என்று தேட வேண்டும்.

## தேவனுடைய இருதயத்தை அறிதல்

எனவே, நான் சொல்லுகிற ஒரேவொரு காரியம் இதுதான். தேவனுடைய இருதயத்தை அறிவது அல்லது தேவனுடைய இருதயத்தை நோக்கிப்பார்ப்பது என்றால் என்ன? போதுமான அளவுக்கு இந்தக் காரியத்தில் நாம் தேவனுடைய சமுகத்தில் நேரம் செலவிட வேண்டும். அது ஒரு நாளாக இருக்கலாம், ஒரு வாரமாக இருக்கலாம், ஒரு மாதமாக இருக்கலாம், ஒரு வருடமாக இருக்கலாம், பத்து வருடங்களாகவும் இருக்கலாம். "*புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன,*" (2 கொரி. 7:5) என்றும், "*பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போயிற்று*" (2 கொரி. 1:8), என்றும் "*மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்,*" (2 கொரி. 1:9) என்றும் பவுல் சொல்லுகிறார்.

இது என்ன விசுவாசம்? இப்படிப்பட்ட கொடிய பாதை வழியாகத் தேவனுடைய மக்கள் சென்றிருக்கிறார்கள், இன்னும் செல்கிறார்கள். ஆனால், அவர் தேவனுடைய இருதயத்தை அறிந்தார். எப்படி? "*நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல் மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக*' (2 கொரி. 1:9) அவர் இதைச் செய்தார். எதற்காக இதைச் செய்தார்? வேலைக்காகக் காத்திருப்பது, கடனிலிருந்து விடுதலை பெறக் காத்திருப்பது, நோயிலிருந்து சுகமடையக் காத்திருப்பது, இவைகளெல்லாம் எதற்காக? ஒன்றேவொன்றுக்காகத்தான். **மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக இதைச் செய்தார்**

## ஆபிரகாமின் அனுபவம்

ரோமர் 4ஆம் அதிகாரம் ஆபிரகாமைப்பற்றி இப்படிச் சொல்லுகிறது. "*அவர் மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தான்*" (ரோமர் 4:17). தேவனைப்பற்றி இரண்டு வருணனைகள் இருக்கின்றன. ஒன்று, அவர் மரித்தோரை உயிரோடெழுப்புகிற தேவன். இன்னொன்று அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர். அவர் கூப்பிடும்போது அங்கு ஏதோ இருப்பதுபோல் கூப்பிடுகிறார். ஈசாக்கைப் பெற்றபோது அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர் என்று அறிந்துகொண்டான். ஈசாக்கைப் பலியிட்டபோது அல்லது ஏறக்குறைய பலியிட்டபோது அவர் மரித்தோரை உயிரோடெழுப்புகிறவர் என்று அறிந்துகொண்டான்.

தேவன் ஒரு வீடு தருகிறார் என்றால் அது ஏறக்குறைய இல்லாதவைகளை இருக்கிறதுபோல் அழைப்பதுபோன்றது. கட்டிய வீட்டை இப்போது விற்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். இது அவிசுவாசம் இல்லை. இன்னொரு வீடு தேவன் தரமுடியுமா? தாராளமாகத் தர முடியும். அவர் மரித்தோரை உயிரோடெழுப்புகிறவர்.

"எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது," என்று பேய் சொல்வான். "இதற்குமேல் போக முடியாது," என்று அவன் சொல்வான். மரணம் என்பதுதான் கடைசி முடிவு. அதற்குமேல் போவதற்கு ஒன்றும் இல்லை. மரித்து, கல்லறைக்குள் வைத்து, கல்லைப் புரட்டி வைத்து முத்திரைபோட்டபின் "அதோடு கதை முடிந்தது" என்று சாத்தான் நினைப்பான்.

நாம் நல்ல போர்வீரர்களாகத்தான் இருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு நாளும் மாலையில் வீடுதிரும்பும்போதும் போர்க்களத்தில் இங்கு ஒரு வில், அங்கு ஒரு அம்பு, இங்கு ஒரு கத்தி, இங்கு ஒரு சிராய்ப்பு, அங்கு ஒரு காயம் பட்டு பாசறைக்குத் திரும்புகிற போர்வீரர்களைப்போல், சுமக்க முடியாத நம்முடைய தளவாடங்களைச் சுமந்துகொண்டு வீடு வந்து சேருகிறோம். இதுதான் நம்முடைய நிலைமை. அப்போது "எல்லாம் முடிந்தது" என்று பேய் சொல்லுவான்.

## முன்மாதிரி இயேசு

கல்லறைக்கு வெளியே நல்ல காலம் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? கல்லறையைத் தாண்டி, கல்லறைக்கு அப்பால், ஒரு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறதா? கல்லறைக்கு அப்பால்தான் ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. நான் பரலோகத்தைச் சொல்லவில்லை. மார்த்தாள் "*உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்,*" என்று சொன்

னதுபோல், "ஆம், மகிமையின் தேவன் என்னுடைய எல்லாக் கடன்களையும் தீர்ப்பார்," என்பதல்ல. அதுவல்ல.

எபிரேயர் 12:1யை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். *"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவைநோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கட வோம். அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்"* (எபி. 12:1-2).

போதுமான அளவுக்கு நாம் தேவனுடைய சமுகத்தில் இருந்தால், "ஓ! நான் என் பலவீனத்தில் அப்படிப் பேசினேன்" என்று ஆசாப் வந்த அதே உணர்வுக்கு நாம் வருவோம் அல்லது தாவீதைப்போல் "என் மேல் ஒரு யுத்தம் எழும்பினாலும் நான் இதின்மேல் நம்பிக்கையாயிருப்பேன்," என்று நேர்மறையாகச் சொல்வோம்.

இப்போது யுத்தத்தைச் சமாளிப்பதிலேயே நேரம் செலவழிந்துகொண்டிருக்கிறது. கடனைச் சமாளிப் பதற்கு, வேலைக்கு விண்ணப்பிப்பதற்கு, மருந்து வாங்க. நாம் சோர்ந்துபோய்விட வேண்டாம். போர் என்றால் இவைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், என்ன இருக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு நாளும் பாசறைக்குத் திரும்பும்போது, "ஐயோ! இன்றைக்கு ஒரு ஈட்டி வந்து என்னைக் குத்தி என் வாழ்க்கை முடிந்திருக்கக்கூடாதா!" என்று எண்ணக்கூடாது.

நாம் தேவனுடைய பிள்ளைகள். நாளைக்குக் காலையிலும் நம்முடைய தேவன் நம்மை எழுப்புவார். அப்போது நாம் "உடல் நலம் சரியில்லை. எனவே, என்னால் போருக்குச் செல்ல முடியாது," என்று சொல்லமுடியாது. காலையில் எழுப்பி, "இன்றைக்கும் உன்னுடைய போர் தொடர்கிறது" என்று சொல் வார். ஆனால், நம்முடைய ஆறுதல் என்னவென்றால், யுத்தம் கர்த்தருடையது. இன்றைக்கு சாயங் காலம் நாம் உயிரோடு பாசறைக்குத் திரும்புவோமா என்று கவலைப்பட வேண்டாம். கொலோசெயர் 3:3 சொல்வதுபோல் *"நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது."* தேவ னுக்குள் மறைந்திருக்கிற நம்மை எந்த எதிரியும் ஈட்டியாலோ, அம்பினாலோ அல்லது வாளாலோ புண்படுத்த முடியாது. இதில் நாம் நம்பிக்கையாயிருக்க வேண்டும்.

நான் சொல்வது உங்களுக்கு வெற்று வார்த்தைகளாகத் தோன்றலாம். ஆனால், நீங்கள் தேவனுடைய சமுகத்தில் போதுமான நேரம் செலவழித்தால் இதுதான் தேவனுடைய இருதயம் என்று நாம் காண் போம். அப்போது தாவீதைப்போல, 46ஆம் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல், *"அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்."* நம்மால் எல்லாவற்றையும் கையாள முடி யாது. போர்க்களத்தின் ஒரு முனைக்குச் செல்லும்போது போர்க்களத்தின் இன்னொரு பகுதியில் போர் வெடித்துச் சிதறுகிறது. அந்தப் பக்கம் சென்றால் இந்தப் பக்கம் ஏதோ நடக்கிறது, இந்தப் பக்கம் சென்றால் அந்தப் பக்கம் ஏதோ நடக்கிறது. நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், தேவன் அந்தப் போரை நடத்துவார்.

நாம் இந்தப் பூமியில் தேவனுக்குச் சாட்சியாக வாழ்கிறோம். தேவனுடைய அன்புக்கு, தேவனுடைய உயிர்த்தெழுதலுக்கு, சாட்சியாக வாழ்கிறோம். தேவன் நம்மை எந்தப் பாதையில் நடத்துகிறாரோ அந் தப் பாதையில் கீழ்ப்படிதலோடு தேவனுக்குச் சாட்சிகளாக வாழ வேண்டும். இந்தப் போர்க்களத்தில் தேவனோடு போதுமான நேரம் செலவிட முடியாது என்றுகூடச் சொல்லலாம். ஆனால், இந்த ஒன்றை நாம் தக்கவைத்துக்கொள்வோமென்றால்... காலையிலோ, மாலையிலோ, இரவிலோ, தேவனுடைய சமு கத்தில் வந்து, நாம் தேவனுடைய முகத்தை, தேவனுடைய இருதயத்தைப் பார்ப்பதற்கு, நேரம் செல விட வேண்டும். அப்போது தேவன் நம்மைத் திடப்படுத்துவார். போர் இந்த மாதம் முடிந்துவிடும் என்று என்னால் சொல்ல முடியாது. அது எவ்வளவு காலம் நடக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், தேவனுடைய போர் தோல்வியில் முடிவடையாது. இயேசு சிலுவையில் மரித்து, கல்லறையில் வைக் கப்பட்டபோது தோல்வியில் முடிந்ததாக நினைக்கலாம். வாய்ப்புகள் நம் கைகளைவிட்டு நழுவிப் போகும்போது நாம் தோற்றுப்போவதாக நினைக்கலாம். அப்படியல்ல. அது பேயின் தந்திரம்.

*"ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வராததையும், பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிவந்திருக்கிறதையும் நான் கண்டபடியினால்...நான் பலி செலுத்தினேன்,"* (1 சாமு. 13:11) என்று சவுல் சொன்னான். வாய்ப்புகள் போகிறதா? போகட்டும். இயேசு கிறிஸ்து எவ் வளவோ வாய்ப்புகளை விட்டிருப்பார். *"நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீடர்களும் பார்க்கும் படி இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றும் செய்ய மாட்டான். நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்*

*படுத்தும்,"* (யோவான் 7:3-4) என்று அவருடைய சகோதரர்கள் சொன்னார்கள். பிதா நமக்கு என்ன பாதை வைத்திருக்கிறாரோ, என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதைச் செய்ய வேண்டும், அந்தப் பாதையில் நடக்க வேண்டும். நம்முடைய பிதாவை மீறி நமக்கு வாய்ப்புகள் வருவதுமில்லை, வாய்ப்புகள் நம் கைகளைவிட்டுப் போவதுமில்லை. தேவன் நம் இருதயத்தைத் திடப்படுத்துவாராக. என்ன நிலையாக இருந்தாலும் தேவனுடைய சமுகத்தில் சிறிதுநேரம் செலவிடுவோம். அப்போது தேவன் நம் இருதயத்தைத் திடப்படுத்துவார்.